# பெண்ணிய நோக்கில் பரத்தமை

# Prostitution in the Feminist Perspective

***ஜோ. சாந்தமூர்த்தி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**J. Santhamoorthy**
*Research Scholar*
*Department of Tamil*
*Annamalai University*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலத்தில் போர்கள் அடிக்கடி நிகழ்ந்ததால் ஆடவர் எண்ணிக்கை மகளிரைக் காட்டிலும் குறைந்தது. ஒருவருக்கு ஒருத்தி என்ற திருமண முறை பல பெண்களுக்கு வாழ வழி வகுக்கவில்லை. எனவே ஆடவர்கள் ஒருத்தியை உலகறிய மணந்தும் ஏனைய மகளிரான காதல் பரத்தை, இப்பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி என்ற பெயரில் உரிமை மகளிராகக் கொண்டும் வாழ்க்கை நடத்தினர். பரத்தை பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக காணப்படுகின்ற காரணத்தை அறியமுடிகிறது.*

***முக்கியச் சொற்கள்:***

*சங்ககாலம், காமக்கிழத்தி, மருதம், பெண்ணியம், பரத்தை*

**Abstract**

*During the sangam period wharves were frequent and the number of males was less than that of females. one-man marriage do not provide a way to for many women's to live. so it is possible that the news about the prostitution of men marrying the other women worldwide and living with other women in the name of love prostitution, seduction, and prostitution, as the right women can be found in abundance in the sangam literature.*

***Keywords:***

*Sangakalam, Kamakizhathi, Marutham, Penniyam, Parathai*

**Citation**

Santhamoorthy, J. "Prostitution in the Feminist Perspective." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 21–26.

**முன்னுரை**

*பெண்ணிய நோக்கில் அல்லது பெண்ணின் பார்வையிலிருந்து செயல்படும் திறனாய்வு பெண்ணியத் திறனாய்வு ஆகும். இப்படி பொதுவாக வரையறை செய்தாலும் போதாது. உடலால் பெண் என அறியப்படுபவர் எல்லோரும் தம்மை - தம்முடைய நிலையையும் அதன் காரணங்களையும் உணர்ந்தவர்கள் எனக் கொள்ள முடியாது. குறிப்பாகச் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் உணர்வுகள் எழுச்சி பெறுகின்றன. பெண் என்பவள் தன்னை அதாவது தனது இருப்பை - ஆளுமையை உணர்த்துவர் என்று பொருள். ஒரு பெண் தனது ஆளுமையைத் தானே உணர முடியாத நிலையில் உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத நிலையில் இந்தச் சமூகம் அவளை ஒடுக்கி வைக்கின்றது. தன்னுடைய திறமைக்கும் தகுதிக்கும் தேவைக்கும் ஏற்ப அவளால் ஒரு நிலைப்பாடு எடுக்க முடியாது ஒரு நிலை இருந்து வருகிறது.*

*நடைமுறைப் பெண்விடுதலை பற்றிய உணர்வு - சமூக எழுச்சியின் ஒரு பகுதியாகும்.*

*பிரான்சு நாட்டை சேர்ந்த சய்மோன் தெ.பௌவேவ்வா* (Simone De Beauvoiva) *எழுதிய இரண்டாவது பாலினம்* (The Second Sex 1949) *என்ற நூலை முன்னோடியாகக் கொண்டு பெண்ணியம் ஓர் அறிவார்த்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது.*

**பரத்தைக் கூற்று**

*சங்க காலத்தில் போர்கள் அடிக்கடி நிகழ்ந்ததால் ஆடவர் எண்ணிக்கை மகளிரைக் காட்டிலும் குறைந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணமுறை பல பெண்களுக்கு வாழ வழிவகுக்கவில்லை. எனவே ஆடவர்கள் ஒருத்தியை உளமறிய மணந்தும், ஏனைய மகளிரான காதல் பரத்தமை, இன்ப பரத்தமை, சேரி பரத்தமை, காமக்கிழத்தி என்ற பெயரில் உரிமை மகளிராகக் கொண்டு வாழ்க்கை நடத்தினர்.*

***"காதர் பரத்தமையர் காமக்கிழத்தியர்***
***பின்முறை வதுவை பெருங்குல கிழத்தியோன்***
***அண்ணமறிய அவை பெண்டிற்கும்"*** [1]

*இந்நூற்பா என்ன கூற வருகிறது எனில் காதற்பரத்தமைக்கும் காமக்கிழத்திக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுகிறது.*

**காமக்கிழத்தி**

***"கொடுமைக்கே கொடுமை கொண்டவராய்***
***காமத்தின் பொருட்டு வரையறுக்கப்படுகிறது"*** [2]

*காதற் பரத்தமை, சேரி பரத்தமை போன்ற பரத்தமைகள் ஆடல் பாடல் கலைகளில் வள்ளவர் ஆகி, அழகும் இளமையும், இன்பமும், காட்டி, பொருளும், இன்பமும் வேண்டி ஒருவர் இடத்து தங்காமல் பலரோடும் சேர்த்து பழகக் கூடியவர்கள்.*

**நற்றிணையில் பரத்தை**

***"மடக் கண் நகரக் கூத்தல் பணைத்தோள்***
***வார்த்த வால்டொற்றுச் சேர்த்துசெறி குறங்கின்***
***பிணைய அம்தழை தைஇத் துணையிலள்***
***விசவுக்களம் பொலிய வந்துதின் றனளே***
***எழுமினோ எழுமினாம் கொழுதற்காக்கம்***

*அணியர் துலன்றிய பேர் இசை முள்ர்ப்*
*பலருடன் கசித்த ஒள'வாய் மலையனது*
*ஒருவேற்கு ஓடி யாங்குஎம்*
*பின்மையது எவனோ இவன் வண்மைதலைப்படினே"[3]*

*தலைவியின் ஊடலைத் தீர்க்கத் தலைவன் விறலியைத் தூது அனுப்பினான். தோழி "இவ்விரலியே தலைவனைப் பரத்தயிடத்துச் சேர்ந்தவன்" என்னும் கருத்துடன் ஆயத்தாரிடம் இவ்விறலி நம் தலைவனை மற்றொரு பரத்தையால் சேர்க்க வந்தனன். நாம் நம் தலைவனைப் பாதுகாத்துக் கொள்வோம் என்றது இப்பாடல்.*

*"பயனப் பால் முயிறு முயிறுமுசு குடம்'பைக்*
*கழனி நாரை உரைத்தலின் செந்நெல்*
*விரவுவெள் லரிசியின் நாஅம் ஊரன்*
*பலர்ப்பெறல் நகைஇநம் இல்வாரலனே*
*மயோன் நலத்தை நம்பிவிடல் லுல்லாளே*
*அன்னியும் பெரியன் அவனீனும் விழுமிய*
*இருபெரு வேந்தர் பொருளகத்து ணசித்த*
*புன்னை விழுமம் போல*
*என்னொடு கசியும் இருவரவ இகலே"[4]*

*தோழி பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனை எதிரெற்றுத் தலைமகனிடம் சென்று கூறினான். தலைவி சினம் கொண்டு உடன்படாதவள் ஆயினள். தோழி உள்ளங் கலங்கி "தலைவன் பரத்தையர் விருப்பத்தோடு வீட்டிற்கு வாராது இருக்கின்றனன். அவ்வாறு வரினும் தலைவி அவனை ஏற்றுக்கொள்ளள். இவ்விருவர் பகையும் யான் இறத்தாலே தீரும் போலும்" எனக் கூறியது.*

**அகநானூற்றுப் பரத்தை**

*"நகை ஆகின்றே - தோழி நெடுநல்*
*மணி கண்டன்ன துணி துணி கயம் துளங்க*
*இரும்ப இயன்றன்ன இருவ் கோட்டு எருமை*
*ஆம்பல் மெல் ஆடை கசிய குவளைக்*
*கூம்பு வீடு பல் புலர் மாந்தி கரைய*
*காஞ்சி நுண் தாவ ஈரம் புறந்து உறைப்ப*
*மெல்சிகு கவுள அல்குதிலை புகுதரும்*
*தனி துறை ஊரன் தினை நார் அகலம்*
*வதுவை தாள் அணிப் புதுவோர்ப் புனிய*
*பசியோடு வருஉம் பாணன் தெருவில்*
*புனிற்றாய் பாய்ந்தெனக் கலங்கி யாம் இட்டு*
*எம் மனைப் புகுதந்தோனே அத கண்டு*
*மெய்ம்புலி உலகை மறையினென் எதிர சென்று*
*இம் மகளை அன்று அஃது உம் மகனை என்ற*
*மம்மச் நெஞ்சினோன் நோக்கி தொழுது நின்றதுவே"[5]*

*பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாக, தோழிக்கு தலைமகன் சொல்லியவை.*

*தலைவன் பரத்தையரோடு நட்புக் கொண்டிருந்தான். அதற்கு துணை நின்ற பாணன் தலைவி மனைக்கு எதிராகச் சென்றான். வழியிற் புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கித் தன் மனையிடத்து வந்தானைத் தலைவி இகழ்ந்து நகையாடினாள். தோழி தலைவனை மண்ணித்து ஏற்றுக்கொள்ளுமாறு கூறத் தலைவி வாயில் மறுத்துக் கூறியது.*

**மருதம்**

***“இம்மலை உலகத்து இசையொடும் விளங்கி***
***மறுமை உலகமும் மாறு இன்று எய்துப***
***.......................................................................***
***மான் தொழில் மா மணி கறங்க கடை கசித்து***
***காண்டன் விருப்பொடு தளர்வு தளர்பு ஓடும்***
***.......................................................................***
***கலக்கினன் போலும் இக் கொடியோன் என்றச்சொல்***
***அலைக்கும் கோலொடு குறுக தலைக்கொண்டு***
***.......................................................................***
***பசங் காணோட்டமும் நலிய***
***அழுங்கினன் அல்லனோ அயர்ந்த தன்மணனே”[6]***

*பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைமகன் சொல்லியவை.*

*பரத்தையிற் பிரிந்தவந்த தலைமகனை ஏற்றுகொள்ள வேண்டும் என்ற தோழி அவன் பொருட்கு வாயிலாக வந்தான். தலைவி வாயில் நேர்ந்த கருத்துடன் பண்டு இயற்கைப் புணர்ச்சிக் காலத்து ஒரு நாள் தலைவன் செய்த ஒன்றனைத் தோழிக்கு எடுத்துக் கூறியதாம்.*

**ஐங்குறுநூற்றில் பரத்தை**

*இவற்றுள் கிழத்தி கூற்றில் பரத்தை காரணமாக பிரிந்து தலைமகன் வாயில் வேண்டி வந்தபொருட்டு கிழத்தி தலைவனிடம் பேசுவதாக அமைந்த பத்து செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.*

***“நறு வடி மா அத்து விளைத்த உரு நீம் பச***
***நெடு நீர்ப் பொய்கைத் துகுமென விழூஉம்***
***கைவண் மந்தி கழாஅ அன்ன***
***நல்லோர நல்லோர நாடி***
***வதுவை அயர விரும்புதி நீயே”[7]***

*தலைவன் பல பரத்தையரை அடுத்தடுத்து வதுவையிற் கூடினான் என்பதறிந்த தலைமகன், அவன் இல்லம் திரும்பியபொழுது ஊடினாள். இதனை மறைத்தல் அரிது என*

*உணர்ந்த இனி இவ்வாறு நிகழாது எனத் தலைவன் உறுதி கூறிய பொழுது தலைவி இங்ஙனம் நொந்த உரைத்தான்.*

**அகநானூறு காட்டும் பரத்தமை**

*இவற்றுள் பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது. இவை மருதத்தின் வழி காணலாம்.*

***"அரிமெய் சிலம்பின் ஆம்பல் அம் தொடலை***
***அம் போழ் அவ்வனைப் பொலிக்க முன்கை***
***.........................................................................***
***முதமை எள்ளல் அஃது அணுகும்தில்ல!***
***சுடர்ப் புந் தாமரை நீர் முதிர்ச் பழனத்து***
***இளமை சென்று நலத் தொல்லஃதே***
***இனிமை எவள் செய்வது, பொய்ம்மொழி எமக்கே"[8]***

*தலைவன் பரத்தையோடு சென்று நீராடி அயர்ந்து மீண்டும் தன் இல்லம் திரும்பித் தலைவியை பாராட்டுகிறான். தலைவி அவள் பரத்தையுடன் நீராடிய செயலை அறிந்திருத்ததால் அவனுடன் ஊடல் கொண்டு கூறுவது இது.*

**முடிவுரை**

*நான் இக்கட்டுரையில் கூறம் கருத்தானது ஆணுக்கும் நிகர் பெண் என்றாலும் உடலால் பெண் என்பவள் அறியப்படுபவள் ஆவாள். பெண்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பிற்கென பல சட்டதிட்டங்கள் வரையறுக்கப்பட்டது. ஏனென்றால் ஒரு பெண் தனது ஆளுமையைத் தானே உணரமுடியாத நிலையல் உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத நிலையில் இந்தச் சமூகம் அவளை அடக்கி வைத்திருக்கிறது.*

*நான் அறிந்த பெண் விடுதலை பற்றிய செய்திகளை கூறியவர்கள் மகாகவி பாரதியார், திரு.வி. கலியாண சுந்தரனார், பெரியார், ஈ.வே.ராமசாமி முதலியோர் பெண் விடுதலைப் பற்றி பேசியுள்ளனர்.*

*எட்டுத்தொகையில் மருத்திணையின் வாயிலாக பரத்தை பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

**சான்றெண் விளக்கம்**


1. *கு.வெ. பாலசுப்பிரமணியம், நற்றிணை மூலமும் உரையும், மருதத்திணை, பா. 170.*
2. *கு.வெ. பாலசுப்பிரமணியன், அகநானூறு மூலமும் உரையும், மருதத்திணை, பா. 56.*
3. *பெ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), ஐங்குறுநூறு மூலமும் உரையும், மருதத்திணை, பா. 61.*
4. *கு.வெ. பாலசுப்பிரமணியம், அகநானூறு மூலமும் உரையும், மருத்தினை, பா. 6.*
5. *தி.சு. நடராசன், திறனாய்வுக்கலை, பா.*

**துணைநின்ற நூல்கள்**

1. கு.வெ. பாலசுப்பிரமணியம் - நற்றிணை மூலமும் உரையும் மருதத்திணை பதிப்பு-2011.
2. கு.வெ. பாலசுப்பிரமணியன், - அகநானூறு மூலமும் உரையும் மருதத்திணை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பு-2011.
3. பெ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.) - ஐங்குறுநூறு மூலமும் உரையும் மருதத்திணை கழக வெளியீடு.
4. தி.சு. நடராசன், - திறனாய்வுக்கலை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை பதிப்பு-2010.

## References

1. *Ku.Ve. Balasubramaniam, Nattrinai Moolamum Uraiyum, Maruthathinai, Print-2011*
2. *Ku.Ve. Balasubramaniam. Agananooru Moolamum Uraiyum Maruthathinai New Chentury Book House Print-2011.*
3. *Pe.Ve. Somasundaranar. Aingurunooru Moolamum Uraiyum Maruthathinai Kazhaga Veliyeedu*
4. *Thi.Su. Nadarajan. Thiranaivukalai New Chentury Book House Print-2010*